1994 நவம்பர் 10]

அடிப்படையிலே இன்னும் அரசு முடிவு எடுக்கவில்லை. ஆகவே, ஒரு விரிவான அறிக்கை 10 கோடியே 35 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பாசனம் பொறியாளரிடத்திலே இருக்கின்றது. அரசுக்கு வருகின்றபோது ஆய்வு செய்யப்பட்டு எந்த நிதியின் அடிப்படையிலே செய்யலாம் என்பதைப்பற்றி அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 10 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் இந்தப் பணியை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது எவ்வளவு விரைவில் ஆராய்ந்து முடிக்கப்படும், எப்பொழுது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜிலேதான் அது இருக்கிறது. அதாவது ஆய்வு நிலையிலே இருக்கிறது. நம்முடைய நிதியாதாரங்கள் இதற்கு இடம் தருவதாக இல்லை. ஆகவேதான் 'எக்ஸ்டர்னல் எய்ட்' என்ற முறையில் வெளி உதவியின் மூலம் இதைச் செய்யலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆக, விரைவில் அது சம்பந்தமான முடிவை அரசு எடுக்கும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 88, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

88—

போளூரில் இருவழிச் சாலை அமைத்தல்

22432 திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பேருந்து நிலையம் அருகில் அடிக்கடி விபத்து ஏற்படுவதைத் தடுக்க இரயில்வே கேட் முதல் தீயணைப்பு நிலையம் வரையுள்ள சாலை, இருவழிச் சாலையாக மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

[*1994* நவம்பர் *10*

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் என்பது கடலூர்–சித்தூர் சாலையின் மையத்தில் இருக்கிறது. இந்தச் சாலையில் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. காரணம் என்னவென்றால் அந்தச் சாலையில் குறிப்பாக இரண்டு, மூன்று சினிமா தியேட்டர்கள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் அங்கே இரண்டு பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளிலும், ஆண்கள் மேல்நிலைப்பள்ளிகளிலும் ஏறத்தாழ ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவச் செல்வங்கள் படிக்கிறார்கள். எனவே அந்த வழியில் குறுக்கிலும், நெடுக்கிலும் செல்லக்கூடியவர்களுக்கு பெரிய ஆபத்துகள் ஏற்படுகின்றன. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அடிக்கிற கைதான் அணைக்கும் என்பார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னாலும்கூட கண்டிப்பாக இது குறித்து அதிகாரிகளிடத்தில் ஆய்வு செய்யச் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்த அடிப்படையில் இதை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் அடிப்பது இல்லை. அரவணைக்கிற பழக்கம்தான் உண்டு. எல்லாவற்றுக்கும் நிதி வேண்டி இருக்கிறது. மனம் இருக்கிறது, பணம் வேண்டுமல்லவா? ஆகவே நம்முடைய உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற அந்தப் பகுதியின் முக்கியத்துவம் கருதி—அதாவது அங்கே பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்றும் சினிமா தியேட்டர்கள் இருப்பதாகவும், மக்கள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாகவும், அதனால் விபத்துகள் அதிகமாக ஏற்படுவதாகவும் சொல்லி இருக்கிறார்கள். ஏற்கனவே அந்தச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றுவதற்கு 10 இலட்சம் ரூபாய் தேவை என்று மதிப்பீடு செய்து அதிகாரிகள் தெரிவித்து இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட பகுதி அதிலே இருவழிச் சாலையாக இருக்கிறது. அதிலே 1.2 கிலோ மீட்டர்

1994 நவம்பர் 10]

தூரம்தான் இன்னும் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்தச் சாலையின் முக்கியத்துவம் கருதி—இந்த ஆண்டு அந்தச் சாலை இருவழிச் சாலையாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிவோடு பரிசீலனை செய்து, என்னுடைய போளூர் நகர்வாழ் மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான இந்த இருவழிச் சாலை அமைப்பதைப் பொறுத்தவரையில் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசின் சார்பில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் சேர்க்கப்படும் என்று அறிவித்ததற்காக என்னுடைய போளூர் நகர்வாழ் மக்களின் சார்பாக உளம் கனிந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். இந்தச் சாலையில் இடையிலே இந்தியன் வங்கி மற்றும் எல்.ஐ.சி. நிறுவனம் போன்றவைகள் எல்லாம் இருக்கின்றன. அவை, தடுப்புச் சுவர் போல கம்பிகளை வைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேல்புறத்திலும், கீழ்புறத்திலும் ஆக 10 அடி அகலம் அந்தச் சாலையை விரிவுபடுத்தினால் போதும். அதாவது 1.2 கிலோ மீட்டர் தூரம் அகலப்படுத்தித் தந்தால் இடையிலே உரிய நடவடிக்கையை நாங்களே அந்தத் தொகுதியின் மக்கள் சார்பாக எடுத்துக் கொண்டு சாலையைச் செப்பனிட்டுக் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனை இவ்வாண்டில் செய்வதாகக் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அதனை உடனடியாக நடைமுறைப்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையை 5 மீட்டர் அகலப்படுத்த வேண்டி இருக்கிறது. ஏற்கெனவே அதைத்தான் நான் சொன்னேன். இடையிலே உள்ள பணிகளைப் பொறுத்தவரையில் அவர்களே செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதி என்பதால் பொதுமக்களின் நலன்கருதி இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கிறேன். அங்கே இரண்டு பக்கத்திலும் மரங்கள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் 5 மீட்டர் அளவுக்கு அகலப்படுத்தலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு தூரம் அந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட இடத்தில்

அகலப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய அதிகாரிகளை ஆய்வு செய்யச் சொல்லி இந்த ஆண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடைமுறைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 89, திரு. ஆர்.பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

89—

வீட்டுத் தோட்டங்களுக்கு பப்பாளி மரக்கன்றுகள் இலவசமாக வழங்குதல்

***35618 திரு. ஆர். பி. பரமசிவம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டுத் தோட்டங்களில் பப்பாளி வளர்க்க தோட்டக் கலைத் துறை மூலம் இலவசமாக கோ. 6 பப்பாளி மரக்கன்றுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தோட்டக்கலைத் துறையின் ஊரகப் பகுதியில் ஊட்டமிகு பழத் தோட்டம் அமைக்கும் திட்டத்தின் மூலம் வீட்டுத் தோட்டங்களில் பப்பாளி வளர்க்க இலவசமாக பழக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்ற இத்திட்டத்தில் கோ. 6 பப்பாளி மரக்கன்றுகளையும் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 10–30

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப்புறத்தில் உள்ளவர்களும் இந்தப் பப்பாளியினுடைய சிறப்பை உணர்ந்து. தங்களுடைய வீட்டுத் தோட்டங்களிலும் இந்தப் பப்பாளிக் கன்றுகளை வளர்த்து பலன் அடைய விரும்புகிறார்கள். எனவே சென்னை, மதுரை, கோவை போன்ற பெரு நகரங்களில் வேளாண்மைத் துறை மூலமாக இலவசமாக இந்தக் கன்றுகளை